**மாத்தறை மாநகர சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேசிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, மாத்தறை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகர துறைகளின் செயற்திட்டங்களுக்காக 1995 ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 89,373,461 இற்கான கடன் தொகையில் மீளாய்வாண்டு செப்தம்பர் 25 திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதி மற்றும் வட்டி ரூபா 40,504,466 தொகை மற்றும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா | நடுத் தீர்ப்பின் பின்னர் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையை கணக்கீடு செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தை தீர்த்துக்கொள்வதற்காக அறுதியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அலகுகள் மற்றும் தண்டப்பணம் தொடர்பாக புதிய | செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 316,149 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வழக்குப் பதிவேடொன்று பேணிச் செல்லல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | |
| (ஆ) | பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 10,460,551 தொகை மற்றும் சேதனப் பசளை செயற்களத்தின் பொலித்தீன் விற்பனையின் மூலம் பெற வேண்டிய தொகை ரூபா 434,220 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தமையால், அந்த வருமான கடன்பட்டோர் பதிவேட்டிலிருந்து அகற்ற முடியாது என மற்றும் பெற வேண்டிய தொகைகள் தொடர்பாக 2024 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது VAT வரி கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணிச் செல்லாமல் அறவிடப்பட்ட மற்றும் அறவிட வேண்டிய ரூபா 9,419,383 தொகை சேவைக் கட்டணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய VAT வரி ரூபா 16,453,706 தொகை வைப்புக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் வருமானம் அதே தொகையால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பெறுமதி கூட்டிய வரிக்காக அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பாக சேவைக் கட்டணத்தின் கீழ் தனியாக பேரேட்டுக் கணக்கொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | VAT வரி கட்டுப்பாட்டுக் கணக்கொன்றின் மூலம் மற்றும் பெற வேண்டிய தொகைகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | 2021 ஆண்டிற்காக கிடைத்திருந்த முத்திரைக் கட்டணத்திற்காக குறைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளல் ரூபா 11,411,957 தொகை மிகையாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் பதிவேட்டில் பதிவு செய்யும் போது ஏற்பட்டிருந்த வழுவொன்றாக காணப்படுவதால் ஒட்டுமொத்த முத்திரைக் கட்டண மீதிக்கு தாக்கமொன்று ஏற்பட்டிருக்கவில்லை என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | ரூபா 963,681 தொகைக்கான 1,291 பொருட்பதிவேட்டு விடயங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யபப்பட்டிருந்தது. | பொருட்பதிவேட்டு பண்டங்கள் செய்முறைச் சாத்தியத்தை கவனத்தில் எடுத்து பதிவேடுகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | 07 நிர்மாண வேலைகள் தொடர்பான நிதிக் கூற்றுக்களில் படி கடன் கொடுத்தோர் மீதி ரூபா 2,572,928 தொகை எனினும், கோப்புக்களின் படி அது ரூபா 156,764 தொகையாக இருந்தமையால் ரூபா 2,416,164 தொகை என மற்றும் 09 நிர்மாண வேலைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் படி கடன்பட்டோர் மீதி ரூபா 3,106,898 தொகை எனினும், கோப்புக்களின் படி அவை ரூபா 188,015 தொகையாக | ஒரு நிர்மாண வேலைக்குரிய கடன்கொடுத்தோர் மீதி மற்றும் 02 நிர்மாண வேலைகள் தொடர்பான கடன்பட்டோர் மீதிகள் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது என. | சரியாக நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டமையால் ரூபா 2,918,883 தொகையென மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (எ) | முன்னைய ஆண்டிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 4,126,435 இற்கான செலவுகள் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், தவறுதலாக ஆண்டிற்கான செலவுகளுக்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது என. | செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 241,460 தொகைக்காக பலவினக் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய செலவுகளுக்காக சரியாக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | சூரிய பெனல் மூலம் உற்பத்தி செய்யப்படும் மிகை மின்சாரத்திற்காக கிடைத்திருந்த ரூபா 306,156 இற்கான தொகை கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் வருமானம் அதே தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வரவுத் தலைப்புக்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கடன்பட்டோருக்கு செலவு வைக்கப்பட்டிருந்ததென. | மீளாய்வாண்டிற்கான வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | சபையில் கடமையாற்றிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்காக உள்ளூராட்சி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 48,734,760 இற்கான தொகையொன்று கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2018 ஒக்தோபர் மாதம் முதல் ஆவணங்களை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 13 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 18,344,893 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 223,408,858 தொகைக்கான 11 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நி.பி. 571 | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 5,268,198 இற்கான 809 வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 143,093,918 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 162,479,763 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 36,775,793 | 43,920,938 | 49,573,197 | 61,391,920 | 36,726,576 | 42,135,018 | 36,096,681 | 67,044,179 |
| வாடகை | 30,939,750 | 37,538,384 | 43,587,093 | 84,530,685 | 28,469,950 | 29,152,465 | 13,395,072 | 90,579,394 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 23,250,000 | 32,849,221 | 32,221,121 | 12,419,057 | 25,241,000 | 23,045,801 | 36,629,472 | 11,790,957 |
| ஏனைய வருமானங்கள் | 171,660,800 | 181,702,095 | 189,212,113 | 26,587,323 | 66,224,500 | 91,570,343 | 67,246,462 | 34,097,341 |
| மொத்தம் | 262,626,343 | 296,010,638 | 314,593,524 | 184,928,985 | 156,662,026 | 185,903,627 | 153,367,687 | 203,511,871 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 64,208,469 தொகையாக காணப்பட்டதுடன், 34549 வீதவரி அலகுகள் தொடர்பாக ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 34,095,896 தொகையுடன் ரூபா 98,304,365 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 36,912,445 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 61,391,920 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | குறிப்பிட்ட தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவித்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | நிலுவை வீதவரியை அறவீடு செய்வதற்காக 10 உத்தியோகத்தர்களுக்கு 2018 முதல் கடந்த ஆண்டு வரையான காலப் பகுதியில் ரூபா 1,955,196 இற்கான தரகுத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. வருடாந்தம் சிட்டையிடப்படும் வீதவரியை அறவீடு செய்வதற்காக சபையின் பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமல் வருடாந்தம் நிலுவை வருமானம் சேகரமாவதனால் நிலுவை வீதவரி வருமானம் அதிகரித்திருந்ததுடன், அந்த நிலுவை 2018 முதல் கடந்த ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக வருடாந்தம் 1 சதவீதம் முதல் 5 சதவீதத்திற்கு இடைப்பட்ட சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | வருமானம் சேகரித்தல் முறையான மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், அதன்படி நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு மற்றும் அதன் முன்னேற்றமொன்றை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்ததென. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 639 கடையறைகளில் 591 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் 358 வாடகைதாரர்களிடம் ரூபா 61,597,767 இற்கான கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபபா/பபாகோ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் பந்திகள் 04 மற்றும் 05 இற்கு இணங்க முறையே ஹுனுகொடுவ புதிய | 03 கடையறைகளுக்கான மற்றும் 02 கடை சதுரங்களுக்கான ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 2,631,000 தொகை அறவீடு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வர்த்தகக் கட்டிடத் தொகுதிக்குரிய 04 கடையறைகள் மற்றும் 03 கடை சதுரங்கள் தொடர்பாக கடையறைகளை வாடகைக்கு கொடுக்கும் போது அறவிடப்பட வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 3,091,000 தொகை அறவீடு செய்திருக்காததுடன், ஹுனுகொடுவ பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியில் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 04 கடையறைகள் மற்றும் 04 கடை சதுரங்கள் தொடர்பான வாடகைதாரர்களுடன் வாடகை உடன்படிக்கைக்கு அணுகியிருக்கவில்லை. | செய்யப்பட்டுள்ளதெனவும் மற்றும் 03 கடையறைகள் மற்றும் 02 கடை சதுரங்கள் தொடர்பாக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதெனவும், ஒரு சதுரத்தின் வாடகையாளர்களுக்கு உடன்படிக்கை மேற்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், மீதியான சதுரங்களின் ஒரே தடவையில் பெறும் பணத்தை செலுத்தி முடிக்கும் படி அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டதெனவும், ஒரே தடவையில் பெறும் பணம் செலுத்தாத கடையறையை சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது என. | |
| (உ) | வல்கம பொதுச் சந்தை கடையறை கட்டிடத் தொகுதி பொது மக்களுக்கு காட்சிப்படுத்தக் கூடியவாறு வரைவு தயாரிக்கப்படாமையால் பொது மக்கள் சந்தைக்கு வருதல் மிகவும் பலவீன மட்டத்தில் காணப்படுகின்ற காரணத்தினால் கடையறைகள் மற்றும் கடை சதுரங்களை பெற்றுக்கொண்டிருந்த 13 வியாபாரிகளின் வைப்புத் தொகை மற்றும் ஒரே தடவையில் பெறும் பணம் மற்றும் மாதாந்த கடை வாடகை ஆகிய ரூபா 2,858,410 தொகை வாடகையாளர்களுக்கு திருப்பச் செலுத்துவதற்கு சபைக்கு நேரிட்டிருந்தது. | திட்டமிடலின் தோல்வி காரணமாக கடையறைகள் மூடப்பட்ட காலம் தொடர்பாக சிட்டையிடப்பட்ட கடை வாடகை மற்றும் ஒரே தடவையில் செலுத்தும் பணம் திருப்பி செலுத்தப்பட்டது என. | சபைக்கு சொந்தமான ஆதனங்களிலிருந்து வருமானம் உழைப்பதற்காக முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஊ) | வருடாந்த கணிப்பீட்டின் போது இனங்கண்டிருக்காத நாடளாவிய கம்பனிகளினால் மற்றும் வியாபார நிலையங்கள், வணிக நிறுவனங்களினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகள் முறையே 61 இல் இருந்து மற்றும் 164 இலிருந்து பெற வேண்டிய ரூபா 2,037,602 இற்கான வருமானமொன்றினை அறவீடு செய்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கம்பனிகளினால் மற்றும் வியாபார நிலையங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களினால் காட்சிப்படுத்தப்பட்டு காணப்பட்ட அறிவித்தல் பலகைகள் முறையே 29 இன் மற்றும் 30 இன் சதுர அடிகளின் அளவு உரிய முறையில் அளவை செய்திருக்காமையால் ரூபா 532,125 இற்கான வருமானம் ஒன்று குறைவாக சிட்டையிடப்பட்டமையால் அந்த பெறுமதி சபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மாத்தறை மாநகர சபையினால் நிருவகிக்கப்படும் உயன்வத்த உதைப் பந்தாட்ட விளையாட்டு மைதானத்தை அண்டிய அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 25 அடி நீளமான அறிவித்தல் பலகை தொடர்பாக சபையின் இணக்கத்திற்கு இணங்க அறவிடப்பட வேண்டிய குறைந்த தரை வாடகை ஒரு அடி நீளத்திற்காக மாதாந்தம் ரூபா 2,500 தொகையாக இருந்தது. அதன்படி, ஒரு மாதத்திற்கு ரூபா 2,500 வீதம் 25 அடி நீளத்திற்காக மாதாந்த தரை வாடகை ரூபா 62,500 தொகை என 2019 ஜுலை 09 திகதி முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட வேண்டிய குறைந்த தரை வாடகை ரூபா 3,375,000 தொகையாக காணப்பட்ட போதிலும், சபையினால் ரூபா 495,000 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 445,101 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 141,307,932 தொகை பெற வேண்டியிருந்தது. | பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ஒவ்வொரு மாதமும் பகுதிகளாக கிடைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் உண்மையாக பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 195,001 தொகையாகும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள்ளல்

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆகஸ்ட் 11 திகதி அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த குப்பைகளின் மூலம் மின்சாரம் பிறப்பிக்கும் செய்திட்டம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை தொடர்பாக அதன் நிர்மாண அலுவல்கள் சாட்டப்பட்டுள்ள கம்பனிக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 25 ஆண்டு காலத்துக்காக சாட்டப்பட்டிருந்த 05 ஏக்கர் காணிக்கான மாதாந்த குத்தகை ஒன்று அறவீடு செய்வதற்கு செயற்திட்டம் செயற்படுத்தப்படாத நிலைமையினால் அந்தக் காணியின் தற்காலிக அனுபவித்தலை முடிவுறுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயோகிரீன் சைகள் தனியார் கம்பனியின் நிதிப் பங்களிப்பின் கீழ் சேதனப் பசளைச் செயற்களமொன்று விரைவாக நிர்மாணித்துக்கொள்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலையீட்டினை பெற்றுக்கொள்வதற்கும், இந்த நிர்மாண வேலை அலுவல்களை பூர்த்தி செய்வதற்கான கால எல்லைகள் குறிப்பிடப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் மாத்தறை மாநகர சபைக்கு சமர்ப்பிப்பதற்கும், நிபந்தனைகளை மீறிய காரணத்தினால் மாத்தறை மாநகர சபைக்கு ஏற்பட்டிருந்த நிதிசார் நட்டத்தை அறவீடு செய்வதற்காக கம்பனிக்கு எதிராக கோறிக்கைப் பத்திரம் ஒன்று வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | குப்பைகளை அகற்றுவதற்காக முறையான மற்றும் நிரந்தர வேலைத்திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | உருவாகிவருகின்ற பாரிய குப்பை மலை காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றாடல் சார் மற்றும் சுகாதாரம் சார் சிக்கல் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக குறுகிய கால தீர்வொன்றென வாடகை அடிப்படையில் எஸ்கவேடர் இயந்திரம் ஒன்றை பயன்படுத்தி குப்பைகளை மண்ணால் மூடுவதற்காக 2018 மே முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 57.72 மில்லியனிற்கான வாடகையொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் மூலமும் நிரந்தர தீர்வொன்று கிடைத்திருக்கவில்லை. | நீதிமன்றக் கட்டளையின் படி பொது மக்களுக்கு தொந்தரவு ஏற்படுத்தாத வகையில் குப்பை செயற்களத்தின் அலுவல்கள் பேணிச் செல்ல வேண்டியமையால் குப்பைகளை துரத்திற்கு அகற்றுவதற்காக மற்றும் அவற்றை மண் இடப்பட்டு மூடுவதற்கு நேரிட்டிருந்ததெனவும், சபைக்கு சொந்தமாக காணப்படும் எக்ஸவேட்டர் இயந்திரத்தை பயன்படுத்தி அதனை செய்ய முடியாமையால் வாடகை அடிப்படையில் PC 200 | குப்பைகளை அகற்றுவதற்காக முறையான மற்றும் நிரந்தர வேலைத் திட்டமொன்று விரைவாக செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எக்ஸ்கவேட்டர் இயந்திரம் ஒன்றின் சேவையை பெற்றுக்கொண்டதெனவும், தற்போது அதற்காக பாரிய தொகையொன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்தமையால் ரூபா 22 மில்லியனை பயன்படுத்தி புதிய எக்ஸ்கவேட்டர் இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக தீர்மானித்திருந்த போதிலும், கொடவில திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தை வேறு ஒரு செயற்திட்டமொன்றிற்கு வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதனால் மாநகர சபைக்கு அவ்வாறான இயந்திரமொன்று கொள்வனவு செய்யும் தேவைப்பாடு தொடர்பாகவும் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுகின்றதெனவும், குப்பைகளின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்திட்டம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்த பின்னர் இந்த இயந்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் சேவையை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 24,952,695 தொகை செலவிடப்பட்டு பல்கனி மற்றும் வெரண்டா உட்பட வாகனத் தரிப்பிடமொன்றுடன் சதுர வடிவில் (Box type) நிர்மாணிக்கப்பட்டிருந்த நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தின் நேர்த்தியான தன்மைக்கு தாக்கம் ஒன்று ஏற்படக் கூடியவாறு ரூபா 360,000 தொகை செலவிடப்பட்டு கனபி கூரையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | முறையான செய்முறை ஒன்றின் படி நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டின் போது சபையினால் ரூபா 2,013,976 இற்கான செலவொன்று மேற்கொண்டு நிறுவப்பட்டிருந்த Nekfa LGS மென்பொருள் 2017 ஆண்டு முதல் கடந்த ஆண்டு வரை வருடாந்த கட்டணமாக ரூபா 696,750 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்த போதிலும், இந்த மென்பொருளின் மூலம் பலவின வருமானப் பிரிவின் வருமான அறிக்கைகள் உரிய முறையில் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்ததுடன், இந்த மென்பொருளுக்குள் நுழைவதை வரையறுக்கும் உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்றும் நிறுவப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 ஆண்டு முதல் இந்த மென்பொருளில் உட்படுத்தப்பட்ட தரவுகளை அழித்துவிடல் தொடர்பான விபரங்களும் கணக்காய்விற்கு இதுவரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானங்களை உரிய முறையில் அறவீடு செய்வதற்கும் முடியாமல் இருந்தது. | பதில் தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | உரிய முறையில் மென்பொருளை செயற்படுத்த வேண்டியதுடன், கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் விரைவாக வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38(1)(உ) இற்கு இணங்க அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் குறிப்பிட்ட காலத்தினுள் பதில் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும், மாத்தறை மாநகர சபைக்கு 2022 ஒக்தோபர் மாதம் முதல் 2024 ஏப்ரல் மாதம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த 09 கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் திருப்ப விசாரித்தல்களுக்காக பதில் அனுப்பியிருக்காததுடன், 2024 மே 20 திகதி அளவில் கடமை நாட்கள் 366 இற்கும் 11 இற்கும் இடைப்பட்ட தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154 ஆவது உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன். | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு அதிகார சட்டத்தின் 07 மற்றும் 08 ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சாட்டப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாத்தறை மாநகர சபைக்கு 2023 செப்தம்பர் மாதம் முதல் 2024 பெப்ரவரி மாதம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த 06 தகவல்கள் அழைத்தல் தொடர்பாக குறிப்பிட்ட தகவல்கள் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்காததுடன், 2023 மே 20 திகதி அளவில் கடமை நாட்கள் 144 இற்கும் 43 இற்கும் இடைப்பட்ட தாமத காலம் கடந்திருந்தது. | | |
| (ஈ) | 2009 மற்றும் 2013 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப் பகுதியைச் சேர்ந்த முத்திரைக் கட்டணம் ரூபா 3,422,895 தொகை மற்றும் தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரிடம் பெற வேண்டிய களியாட்ட வரி ரூபா 4,599,519 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதியை அறவீடு செய்தல் தொடர்பாக சபையினால் இயலுமான அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன என. | சபைக்குக் அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நகரத்துறை செயற்திட்டத்தின் கீழ் மாத்தறை மாநகர சபைக்கு வழங்கியிருந்த ரூபா 154.194 மில்லியனுக்கான கடன் தொகை மற்றும் நிலுவை வட்டியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து மாத்தறை மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 9,790,824 தொகைக்கான நிலுவை வாடி வீட்டு வாடகை மீதி சபையினால் செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டித் தொகைக்கு எதிரீடு செய்யப்பட்டு, மீதிக் கடன்தொகையை செலுத்துவது தொடர்பாக கலந்துரையாடலொன்று தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், இந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்த்த பின்னர் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையை கணக்கீடு செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வெளிப் பொறுப்புக்கள் விரைவாக தீர்க்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2007 – 2022 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த 20 விடயங்களைச் சேர்ந்த 172 அலகுகள் கணக்காய்வுத் திகதியாகிய 2023 செப்தம்பர் 14 திகதி அளவில் 01 வருடத்திற்கும் 16 | கணினி தரவு முறைமையொன்றின் மூலம் களஞ்சிய இருப்பு கட்டுப்பாட்டு செய்முறைக்கு உரிய மென்பொருளுக்காக தரவுகள் உள்ளீடு செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன், அந்த | இருப்புக் கட்டுப்பாடு உரிய முறையில் பேணிச் செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களும் 07 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. அவற்றில் 15 விடயங்கள் தொடர்பாக ரூபா 1,782,100 பெறுமதி காணப்பட்டதுடன், 05 விடயங்களின் பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | முறைமை உரிய முறையில் செயற்படு தன்மைக்கு ஆக்குவதன் மூலம் எதிர் காலத்தில் இந்த பலவீனங்களை தவிர்த்துக்கொள்வதற்கு இயலுமாகும் என. | |
| (எ) | 2019 – 2023 காலப் பகுதியுள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 2,821,200 பெறுமதியான டயர்கள் மற்றும் டியுப்கள் மீளாய்வாண்டு செப்தம்பர் 15 திகதி அளவிலும் களஞ்சியத்தில் காணப்பட்டது. | கணினி தரவு முறைமையொன்றின் மூலம் களஞ்சிய இருப்பு கட்டுப்பாட்டு செய்முறைக்கு உரிய மென்பொருளுக்காக தரவுகள் உள்ளீடு செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன், அந்த முறைமை உரிய முறையில் செயற்படு தன்மைக்கு ஆக்குவதன் மூலம் எதிர் காலத்தில் இந்த பலவீனங்களை தவிர்த்துக்கொள்வதற்கு இயலுமாகும் என. | தேவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | இலக்கம் LF - 1132 கொண்ட Isuzu அனர்த்த இடர்சித்தல் வாகனம் 2012 நவம்பர் 28 திகதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், அதற்காக நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை மற்றும் வாகனத்தின் திருத்த வேலைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,529,829 இற்கான மதிப்பீட்டிற்கு உரிய திருத்த வேலைக்கான செலவு, காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மீளளிப்பு செய்யப்பட்ட தொகை மற்றும் திருத்த வேலையின் பின்னர் மோட்டார் வாகன பரிசோதகர் மற்றும் இயந்திரப் பொறியியலாளர் வழங்கியிருந்த பரிந்துரைகளுடனான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் எனவும் குறிப்பிட்ட தகவல்கள் கோப்பில் காணப்படவில்லை என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், வாகன விபத்துக்குரிய கோப்புக்கள் நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (ஐ) | தீயணைப்பு அலுவல்களுக்காக பயன்படுத்தக்கூடிய அனர்த்த இரட்சித்தல் வாகனம் சுமார் 1 ½ வருட காலம் செயற்படாமல் காணப்படுவதுடன், தீயணைப்பு அலுவல்களுக்காக தற்போது பயன்படுத்தப்படும் LF – 7484 வாகனம் புயல் மற்றும் சுனாமி போன்ற அனர்த்த சந்தர்ப்பங்கள் தவிர சிற்சில நபர்களினால் | தீப்பற்றுதல் அடிக்கடி ஏற்படாத செயற்பாடு ஒன்றாக காணப்படுவதால், அந்த வாகனம் மற்றும் பதவியணியினரை ஏனைய கருமங்களுக்காக ஈடுபடுத்திக்கொள்ளுதல் பொதுமக்களுக்கு மிகவும் ஆக்கபூர்வமான சேவையொன்றை | தீயணைப்பு அலகு செயற்படு மட்டத்தில் பேணிச் செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவைப்பாட்டின் மீது மற்றும் ஏனைய வெளி அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுகின்றதென தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | பெற்றுக்கொள்வதற்கு சாதமாக இருக்கின்றது என. | |
| (ஒ) | மீளாய்வாண்டு பெப்ரவரி 01 திகதி முதல் செப்தம்பர் 12 வரையான காலப் பகுதியினுள் சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 725,688 தொகை பெறுமதியான 1985 லீற்றர்கள் எரிபொருள் வழங்கப்பட்டிருந்த போதிலும், மைலோமீற்றர் செயற்படாமையால் எரிபொருள் சமப்படுத்தல் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பித்திருக்கவில்லை. | எரிபொருள் எரிவினை கவனத்தில் எடுத்து வினைதிறனான பெறுமதியொன்று பெற்று அதன்படி நாளாந்த ஓட்ட அட்டவணை சமப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது என. | எரிபொருள் சமப்படுத்துதல் உரியமுறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஓ) | குமாரதுங்க முனிதாஸ பொது நூலகம் நிறுவுவதற்காக 2017 ஆண்டின் போது ரூபா 759,550 இற்கான பெறுமதியை உடைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு ஒக்தோபர் 17 திகதி வரை கொள்வனவு செய்திருந்த சேவர் கணினி செயற்படாமையினால் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் இருந்து. | எதிர் காலத்தில் server rack ஒன்று மற்றும் 2 Kv online UPS இயந்தரமொன்று கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதெனவும், நூலகத்தின் தன்னியக்க செயற்திட்டத்தின் அலுவல்கள் தொடர்ந்து நடாத்திச் செல்வதன் மூலம் வினைத்திறனுடைய மற்றும் ஆக்கபூர்வமான நூலகச் சேவையொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நூலகச் சேவையை வினைத்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு ஜூன் 30 திகதி வரை 3431 கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கான 372 இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. 2016 ஆண்டில் வழங்கியிருந்த 607 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களில் மாநகர சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கச் சான்றிதழ் வழங்கும் முன்னேற்ற அறிக்கையின் படி இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத கட்டிடங்களின் எண்ணிக்கை 503 தொகையும், அங்கீகரிக்கப்பட்ட வரைபுக்கு முரணாக நிர்மாணித்தல் | 2016 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபுகள் 05 வருடங்களை மிகைத்துள்ளமையால், மீண்டும் புதிதாக வரைபு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னர் இணக்கச் சான்றுகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டதெனவும், தற்போது 2016 ஆண்டிற்குரிய மீதியாக இருந்த கட்டிடங்களின் விண்ணப்பக் கோப்புக்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் | இணக்கச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் பல்வேறு காரணங்களினால் 121 கட்டிடங்களுக்கு இணைக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு முடியாமல் இருந்ததென அவதானிக்கப்பட்டமையால் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வரைபுக்கு இணங்க கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளவா என்பது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்தல் பலவீனமட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும். | |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை மாநகர சபைக்கு சொந்தமான கடற் கரையோரப் பகுதியில் “Spicy street bite mine spark food festival” கொண்டாட்டத்திற்காக நிலத்தை தற்காலிகமாக வடகைக்கு கொடுத்தல் மூலம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 335,543 தொகையினை அறவீடு செய்வதற்கு பொறுப்பான தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய குத்தகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முறையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருந்த 04 நிர்மாண வேலைகளுக்காக 2010-2023 நகர்சார் அபிவிருத்தி அதிகார பிரதேத்திற்கான அபிவிருத்தி திட்டத்தில் வரைபுகள் மற்றும் கட்டிட பிரமாணங்கள் அடங்கியுள்ள 11 ஆவது தொகுதியில் V அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ரூபா 564,086 இற்கான கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை திட்டக் குழுவின் தீர்மானத்தின் படி செயற்படுத்தப்படும் என. | அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு ஜனவரி முதல் செப்தம்பர் வரையான காலப் பகுதியில் வீதி விளக்கு பராமரிப்பு அலுவல்களுக்காக 07 சந்தர்ப்பங்களில் வீதி விளக்கு தொகுதிகள், மின்குமிழ்கள் மற்றும் ஏனைய துணைக் கருவிகள் 2235 அலகுகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,813,450 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 1,614,100 | தற்போது வீதி விளக்கு தூண்களில் இலக்கமிடப்பட்டு வருவதனால் எதிர் காலத்தில் களஞ்சியத்தில் இருந்து வீதி விளக்குகள் பெற்றுக்கொள்ளும் போது இலக்கமிடப்பட்டு பெற்றுக்கொள்வதற்கு | வீதி விளக்குகளின் பராமரிப்பு அலுவல்கள் முறைப் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை பெறுமதியான உபகரணங்கள் மின் தொழில்நுட்பவியலாளர் மற்றும் வேலை வெளிக்கள நிருவாகிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், வீதி விளக்குகளுக்கு இலக்கமிடப்பட்டிருக்காமை, பராமரிப்பு விடயங்களுக்காக களஞ்சியத்திலிருந்து பெற்றுக்கொண்டிருந்த வீதி விளக்குத் தொகுதிகள் மின் குமிழ்கள் மற்றும் ஏனைய துணைக் கருவிகள் ஆவணப்படுத்தியிருக்காமை, நாளாந்த வீதி விளக்குப் பராமரிப்புப் பதிவேடு சரியாக பேணிச் செல்லாமை, வீதி விளக்கின் பராமரிப்பு தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்வதற்காக முறையான பதிவேடொன்று பேணப்பட்டிருக்காமை, செயலிழந்த மின்குமிழ்களை திருத்த களஞ்சியத்திற்கு ஒப்படைக்கும் முறையான செய்முறையொன்று கடைபிடிக்கப்படாமை மற்றும் வீதி விளக்கு பராமரிப்பு அலுவல்களுக்காக பயன்படுத்தப்படும் இலக்கம் 50 – 4213 மற்றும் HF – 4422 கொண்ட 02 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த வீதி விளக்கு பராமரிப்பு அட்டவணைகளை பரிசோதனை செய்த போது சமமின்மைகள் காணப்படல் போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். பராமரிப்பு அலுவல்களுக்காக களஞ்சியத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் வீதி விளக்குகள், உபகரணங்கள் தற்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது எனவும், நாளாந்த வீதி விளக்கு பராமரிப்புப் பதிவேடு சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | |

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த மா நாட்டில் பங்குபற்றுவதற்காக சபை உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக கடந்த மற்றும் மீளாய்வு ஆண்டுகளின் போது ரூபா 920,600 தொகை வெளித் தரப்பினர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண ஆளுனரினால் வழங்கியிருந்த அங்கீகரத்தின் அடிப்படையில் செயற்பட்டுள்ளது என. | தாபன கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | நிர்மாணிக்கும் பாதைகளில் பூசுவதற்காக மற்றும் பிரீமிக்ஸ் உற்பத்திக்காக தகைமை காணப்படாத 80 / 100 லீற்றர் 180 கொண்ட 10 தார் பீப்பாக்கள் 2023 | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | உரிய நியமங்களுடன் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஜூலை 11 திகதி ரூபா 362,500 தொகை செலவிடப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், ஆய்வுகூட பரிசோதனையின் போது அந்த தார்களில் Penetration 62 தொகையாக காணப்பட்டிருந்தமையால் கொள்வனவு செய்திருந்த தார் உரிய நியமங்களுடன் காணப்படவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2022 ஜனவரி 01 திகதி முதல் மீளாய்வாண்டு நவம்பர் 13 திகதி வரையான காலப் பகுதியில் பிரீமிக்ஸ் தயாரிப்பதற்காக ரூபா 692,823 தொகை பெறுமதியான ¼" சிப்ஸ் கற்கள், மணல் மற்றும் ரூபா 120,820 தொகை பெறுமதியான 690 லீற்றர் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பிரீமிக்ஸ் கனமீற்றர் ஒன்று உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்துவதற்காக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தரப்படுத்தப்பட்டிருந்த நியமம் செய்யப்பட்டுள்ள தார் எண்ணிக்கையை விட மிகையாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், சில பொருட்கள் குறைவாகவும், ½" சிப்ஸ் கற்களுக்கு பதிலாக ¼" சிப்ஸ் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. காலப் பகுதியில் தயாரிக்கப்பட்ட பிரீமிக்ஸின் எண்ணிக்கை தொடர்பாக அறிக்கைகளும் மாநகர சபையில் காணப்படவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நியம அளவின் படி பண்டங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.6 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஜனவரி 01 திகதி முதல் மீளாய்வாண்டின் ஜூன் 26 திகதி வரையான காலப் பகுதியில் 24 சந்தர்ப்பங்களில் ரூபா 1,019,000 தொகை செலவிடப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து 37 கியுப் மணல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், தேவையான மணல் எண்ணிக்கையை அண்ணளவாக மதிப்பீடு செய்யாமை, இரகசியத் தன்மை பேணக்கூடியவாறு கூறுவிலைகள் அழைக்கப்படாமை, மொத்த கூறுவிலைகள் மற்றும் விலைக் | தற்போது மாநகர சபைக்கு மணல் வழங்கும் நிறுவனம் என வ/ப இலங்கை கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தை ஏற்றுக்கொண்டிருந்ததென வும், மண் இருப்புக்கான கட்டளை வழங்கிய பின்னர் அதன் மாதிரிகள் மாகாண நிர்மாண வேலை பண்டப் பரிசோதனை ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டு | முறையான செய்முறை ஒன்றின் படி உரிய நியமத்தை உடைய மணல் கொள்வனவு செய்து வினியோகிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கழிவு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை, மாவட்ட விலைக் குழுவின் கூறுவிலைகளை விட கூடுதலான விலையில் அங்கீகாரம் இன்றி 34 கியுப் மணல் கொள்வனவு செய்வதற்காக ரூபா 264,800 தொகை மிகையாக செலுத்துதல், 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக மீண்டும் கட்டளையிடல், தரமானவை என தகைமை அறிக்கை பெற்றுக்கொள்ளாமை, மணல் இருப்பு கிடைத்தவுடன் இருப்புப் பெறுவனவுப் பத்திரம் (Stock received note) தயாரிக்காமை மற்றும் பின்கார்ட் பத்திரத்தில் உட்படுத்தப்படாமை, கொள்வனவு செய்யப்பட்ட மணல் முறையற்ற விதத்தில் வினியோகித்தல் மற்றும் மணல் இருப்பில் குறைவு காணப்படல் ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. | உரிய நியமத்தில் காணப்படுகின்றதென சான்றுபடுத்திய பின்னர் கொடுப்பனவு செய்வதற்கும், உரிய நியமத்தில் காணப்படாவிடின் திருப்பி எடுத்துச் செல்லப்பட வேண்டும் என கூறுவிலைகள் அழைக்கும் போது குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவுருத்தப்பட்டதெனவும், நகர பொறியியலாளர் அலுவலகத்தில் பேணப்படுகின்ற பதிவேடு ஒன்றின் மூலம் குறிப்பிட்ட நிர்மாண வேலைகளுக்காக மணல் வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | |

### 3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை மாநகர சபையின் நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு இரண்டு கட்டங்களின் கீழ் ரூபா 23,346,341 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், மொத்த கிரய மதிப்பீடொன்று சரியாக தயாரிக்கப்படாமையால் ரூபா 1,731,756 இற்கான மேலதிக செலவொன்றும், உரிய முறையில் திட்டமிடல் மற்றும் தேவைப்பாட்டை இனங்காணாமையினால் ரூபா 146,824 இற்கான மேலதிக செலவொன்றும், சரியான ரேட்கள் பயன்படுத்தப்படாமை மற்றும் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகளுக்காக மிகையாக ரூபா 208,274 தொகையும், உரிய நியமங்களுடன் வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் ரூபா 2,143,522 தொகையும் சபை நிதியத்திலிருந்து ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | முறையான திட்டமொன்றின் சரியாக மதிப்பீடுகள் தயாரித்து சரியான ரேட்டுகளை பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்கூறிய உத்தியோகபூர்வ வாசஸ்தளம் நிர்மாணிக்கும் போது 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4:3:1 மற்றும் 4:3:2 ஏற்பாடுகளுக்கு புறம்பாக நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் நிர்மாணிக்கும் முதலாவது கட்டத்தில் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 12,953,254 தொகைக்கான மொத்த கிரய மதிப்பீட்டில் அடங்கியுள்ள ரூபா 6,266,565 தொகைக்கான 55 வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன், அது மொத்தக் கிரய மதிப்பீட்டின் வேலை பெறுமதியின் 48 சதவீதமாக காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4:3:1(இ)(ii) ஏற்பாடுகளுக்கு புறம்பாக மேற்கூறிய உத்தியோகபூர்வ வாசஸ்தளம் நிர்மாணிக்கும் போது சிவில் வேலைகளின் பெறுமதியில் 10 சதவீத உச்ச அளவு உள்ளடக்கி பௌதீக அவசர நிச்சயமற்ற தேவைப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,295,325 இற்கான தொகையை மிகைத்து மேலதிக வேலைகள் (Extra work) மற்றும் மிகை வேலைகளுக்காக (Excess work) ரூபா 7,892,682 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அது மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 61 சதவீதமாகும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2021 மற்றும் மீளாய்வாண்டின் போது மாநகர சபை எல்லைக்குள் காணப்படும் வாய்கால்களை சுத்தம் செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட விலை ரேட்களை விட மிகையாக ரூபா 990,520 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், வாய்காலைகளை சுத்தம் செய்வதற்கான முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று மற்றும் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு கிரயம் குறைவாக இருக்கக்கூடியவாறு உடன்படிக்கைகளுக்கு அனுகியிருக்காமல் வாடகை அடிப்படையில் பொன்டுன் ஒன்று பெற்றுக்கொண்டிருந்ததுடன், சபைக்கு சொந்தமான JCB – 8040 இலக்க எக்ஸ்கவேட்டர் இயந்திரத்தை பயன்படுத்தாமல் அதற்காக ரூபா 1,584,710 இற்கான மேலதிக கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் பெற்றுக்கொண்டிருந்த அளவைகளின் படி நீர்ப்பாசண ரேட்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் அளவில் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டதெனவும், சபைக்குச் சொந்தமான எக்ஸ்கவேட்டர் இயந்திரத்தை பயன்படுத்தி வாய்க்கால்களை சுத்தம் செய்வதற்காக பாரிய அளவிலான பாச்ஜ் உபகரணமொன்றை பயன்படுத்த வேண்டும் எனவும், அவற்றை வாய்க்காலில் செலுத்துதல் மேற்கொள்வதற்கு முடியாது எனவும். | கிரயம் குறையக்கூடியவாறு செயற்பட வேண்டும். |

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 ஆகஸ்ட் 22 திகதிய இலக்கம் 18/2001 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க உச்ச கால வரையறை 05 வருடங்கள் ஒரு பதவியில் / ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றியிருந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையமொன்றில் கடமையாற்றுவதற்காக இடமளிக்குவதற்காக உடனடியாக இடமாற்றம் வழங்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான 13 உத்தியோகத்தர்கள் 05 வருடங்களை விட மிகையான கால வரையறையை விட சபையில் சேவையாற்றி வருகின்றதென காணக்கூடியதாக இருந்தது. | இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்ட போதும் கிடைக்கப் பெறாமை, பதிற்கள் கிடைக்கப் பெறாமை மற்றும் ஓய்வுபெறல் மற்றும் உயர் தரப் பதவிகளில் நியமனம் பெறல் ஆகிய விடயங்கள் இடமாற்றம் கிடைக்கப் பெறாமைக்கான காரணமாக இருந்தது எனவும் 2024 ஆண்டில் சிலருக்கு இடமாற்ற கட்டளை கிடைத்துள்ளது என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 12 உத்தியோகத்தர்களிடம் அறிவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 130,847 தொகைக்கான கடன் மீதிகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 4 கடன்காரர்களின் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு பதில் ஏதும் கிடைக்கப்படவில்லை எனவும், சில கடன்காரர்களின் பிணையாளர்கள் ஓய்வு பெற்றிருந்தனர் எனவும் அறவிட முடியாது என உறுதிப்படுத்தப்பட்டுள்ள 11 கடன் பெற்றவர்களிடம் ரூபா 49,535 தொகைக்கான கடன் மீதிகளை பதிவழிப்பதற்காக தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | கடன் மீதிகளை விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | சபையில் காணப்படும் எட்டு கனிஷ்ட ஊழியர் பதவிகளில் ஏற்பட்டுள்ள 62 வெற்றிடங்களை நிரப்பும் போது இலக்கம் 87.உ.2 (2019/மா.மா.ந.ச./நிதி/பிர144) கொண்ட 2019 பெப்ரவரி 12 திகதி சபையில் கடமையாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலில் அதனை உட்படுத்தியிருக்வில்லை. | சபை தீர்மானத்தின் படி அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும், தென் மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்கள் சார் கனிஷ்ட பதவியணிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின்படி ‘‘மாத்தறை மாநகர சபையில் கடமையாற்றும் ஒப்பந்த அடிப்படை ஊழியர்களுக்கு முக்கியத்துவம் | சபை தீர்மானத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்படும்'' என குறிப்பிட்டு விஷேடத்துவம் ஒன்று ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்காமையால் வர்த்தமானி அறிவித்தலில் அவ்வாறு குறிப்பிடல் மேற்கொள்ளப்படவில்லை என. | |
| (ஈ) | சபையின் சுகாதார தொழலாளர்கள் ஆட்சேர்க்கும் போது மாத்தறை மாநகர சபை அதிகார பிரதேசத்தில் வசிக்கும் ஒரு வருடத்திற்காக 05 புள்ளிகள் வீதம் 09 வருடங்களுக்கு உச்சமட்டம் 45 புள்ளிகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், மாநகர சபையின் அதிகார பிரதேசத்தில் வசிப்பதை கவனத்தில் எடுக்காமல் புள்ளிகள் வழங்கப்படல், வதிவுச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாத வதிவுகளுக்காக புள்ளிகள் வழங்கப்படல், நேர்முகப் பரீட்சை குழுவினால் வெவ்வேறாக வழங்கியிருந்த புள்ளிகளின் கூட்டுத்தொகை இறுதிப் பெறுபேறு குறிப்பிடப்பட்ட மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையுடன் இணக்கம் செய்த போது 06 விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் பொருத்தம் இன்மை, திருத்தப்பட்ட புள்ளிகளுக்காக சுருக்கக் கையெழுத்திட்டிருக்காமை மற்றும் 45 வயதைத் தாண்டிய அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத விண்ணப்பதாரிகள் தொழிலளார் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சைக் குழுவின் பரிந்துரை வழங்கியிருத்தல் போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. | புள்ளிகளின் கூட்டுத்தொகையிடையே சமமின்மைகள் மற்றும் புள்ளிகளை திருத்திய போது சுறுக்கக் கையெழுத்திடாமை தவறுதளாக ஏற்பட்டிருந்ததெனவும், அதன் மூலம் நியமனம் பெறும் எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை எனவும், தொடர் இலக்கம் 04, 05, 18, 20, 21 மற்றும் 29 வரை காணப்பட்ட விண்ணப்பதாரிகள் 06 பேரும் ஒப்பந்த அடிப்படையில் மாநகர சபையில் கடமையாற்றியிருந்தமையால் அவர்கள் தொடர்பாக கவனம் செலுத்தி ஆளுனரின் அங்கீகாரத்தின் கீழ் ஆட்சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சைக்குழு பரிந்துரைக்கப்பட்டிருந்தது என. | அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் மாத்திரம் சேர்க்கப்பட வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட வேலை அத்தியட்சகர் பதவிக்காக மீளாய்வாண்டு ஜனவரி 05 திகதி தொழில்நுட்ப சேவையின் III ஆம் தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதம் 04 திகதி முதல் உத்தியோகத்தர் ஓய்வுபெற்ற பின்னர் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் தகைமையுடைய நபரொருவர் வேலை அத்தியட்சகர் பதவிக்கு நியமனம் | குறிப்பிட்ட பதவிக்காக தொழில்நுட்ப சேவையில் தகைமை உடைய உத்தியோகத்தர் ஒருவரை பெற்றுத்தரும் படி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவித்த பின்னர் தென் மாகாண பிரதிப் பிரதான செயலாளரின் (பொறியியல் சேவை) அங்கீகாரத்தின் மீது 2023 செப்தம்பர் 12 முதல் ஒரு | பதவி வெற்றிடங்களுக்காக தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர் விரைவாக நியமனம் செய்யப்பட வேண்டும். |

செய்திருக்கவில்லை. மேலும் 04 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வட்டாரத்தின் கடமைகள் சாட்டல் செய்யும் போது முறையான செய்முறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

வாரத்தில் 02 நாட்கள் அந்த பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் I உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டதெனவும், 2024 மார்ச் 21 திகதி முதல் மா நகர சபையில் கடமையாற்றும் தொழில்நுட்ப சேவையின் (சிவில்) தரம் I உத்தியோகத்தர் ஒருவர் முழு நேர அடிப்படையில் அந்தப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டதெனவும், மக்கள் செறிவு அடிப்படையில் தொழில்நுட்ப சேவை உத்தயோகத்தர்களுக்கு வட்டார கடமைகள் சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டதெனவும்.